# சங்குப்பிட்டி-கேரதீவு பாதைதிறக்க ஆலோசனை

(கொழும்பு)

யாழ். மாவட்ட மக்களின் போக்குவரத்திற்காக சங்குப்பிட்டி - கேரதீவு பாதையை திறக்க அரசு ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக மேற்படி பாதை திருத்தத்திற்கான மதிப்பீட்டை செய்ய அரசு சம்பந்தப்பட்டவர்களை பணித்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் 2-ம் சுற்றுப் பேச்சுக்களின்போது இப் பாதை தொடர்பாகவும் பேச்சுக்கள் நடாத்தப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம் 24 1994

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 07 இதழ் 262
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-10-1994

## யு. என். எச். சி. ஆரின் மேற்பார்வையில் திறப்பு!

(கொழும்பு)

யு. என். எச். சி. ஆரின் மேற்பார்வையில் மட்டுமே சங்குப்பிட்டி - கேரதீவு பாதை திறக்கப்படுமென பாதுகாப்புபடை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். குடாநாட்டிற்கான பாதை திறக்கப்படுவதற்கு இராணுவமே முட்டுக்கட்டையாக இருப்பதாக குற்றம் சாட்டப்படுவதால்படையினர் இவ்வாறானதொரு நிலைக்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது

மேற்படி பாதை திறப்பது தொடர்பாக படைத்தளபதிகள் பிரதமருடனும், பாது

(4-ம் பக்கம் பார்க்க)

★ அரசு - புலிகள் பிரதிநிதிகள்

# இரண்டாம் கட்டப் பேச்சுக்கள்

# இன்று யாழ். நகரில் ஆரம்பம்!

## யுத்த நிறுத்தம், பாதைதிறப்பு குறித்து ஆராய்வு!

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இன்று காலை யாழ் நகரில் நடைபெறவுள்ளது. இப்பேச்சுக்களின் போது யுத்த நிறுத்தம், பாதை திறப்பு ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் எனத் தெரியவருகிறது.

இப்பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளும் அரச பிரதிநிதிகள் இன்றுகாலை யாழ்ப்பாணம் வந்துசேருவர். முதற் கட்டப்பேச்சு வார்த்தையின் போது கலந்துகொண்ட பிரதமரின் செயலர் திரு. பலபத்த பெண்டி தகவல் அமைச்சின் செயலாளர் திரு. லயனல் பெர்ணாண்டோ, இலங்கை வங்கியின் தலைவர் திரு. ஆசீர் வாதம், கட்டிடக்கலை நிபுணர் திரு. நவீன்குணரட்ண ஆகிய பிரதிநிதிகள் இரண்டாம் கட்டப்பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வர் என அரசு அறிவித்துள்ளது.

இப்பேச்சு வார்த்தையில் விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறை

(4-ம் பக்கம் பார்க்க)

## நூலக புனரமைப்பு குழுவில் புலிகள் பிரதிநிதி

(கொழும்பு)

யாழ், பொது நூலகத்தினை புனரமைப்பதற்கென மூன்று அங்கத்தவர்கள் கொண்டகுழு ஒன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவில் விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதி ஒருவரைச் சேர்ப்பது பற்றி ஆராயப்படும் என்று அரச பிரதிநிதி ஒருவர் ரூபவாஹினிக்கு தெரிவித்துள்ளார். -ரி

## விக்டர்ஐவன், வசந்தராஜா இன்று யாழ். நகர் வருவர்

[கொழும்பு[

'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன், மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவர் வசந்தராசா ஆகியோர் இன்று காலை யாழ்ப்பாணம் வரவுள்ளதாக கொழும்பு

(2-ம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் குறித்து ஆராய்வதற்கு அரசு தயார்

(கொழும்பு)

வட கிழக்கில் யுத்த நிறுத்தம் சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கப்பெற்றால் அது பற்றி ஆராயவும் அரசாங்கம் தயாராக உள்ளது என்று அரசாங்கத்தூதுக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளதாக ரூபவாஹினி நேற்று தெரிவித்தது.

முதலாம் கட்டப் பேச்சு வார்த்தைகள் கடந்த 13-ம் 14-ம் திகதிகளில் நடைபெற்ற போது அதில் யுத்தநிறுத்தம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது,

இப்பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட அரசு தரப்பு பிரதிநிதிகள் கொழும்பு திரும்பியதும் இது தொடர்பாக பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கு தெரிவித்தனர். இதனையடுத்து அமைச்சரவையுடன் இது தொடர்பாக ஆராயப்பட்டது குறிப்பிடத்தக்கது'

இதேவேளை யுத்தநிறுத்தம்

(4-ம் பக்கம் பாக்க)

## 16 பத்திரிகையாளர்கள் நேற்று யாழ். வந்தனர்

(யாழ்ப்புாணம்)

கொழும்பிலிருந்து புறப்பட்ட 16 பேர்கொண்ட பத்திரிகையாளர் குழு நேற்றுக் காலை 9-30மணிக்கு கோமாரி கப்பல் மூலம் பருத்திதுறைக்கு வந்து அங்கிருந்து யாழ். வந்து சேர்ந்தனர்.

இந்தப்பத்திரிகையாளர்கள் நேற்று யாழ். நகரில் குண்டு வீச்சினால் சேதமடைந்த கட்டிடங்களை பார்வையிட்டுபடம் பிடித்துக்கொண்டதுடன் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கும் நேரில்சென்று தகவல் சேகரித்தனர்,

கீழே பத்திரிகையாளர் குழுவின் விபரம்:

(7-ம் பக்கம் பார்க்க)

## இனவாதம், யுத்த உணர்வுகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுகாண வேண்டுமென்று அறிவித்துள்ளது. நாங்கள் யுத்தத்தை நிறுத்துவது மாத்திரமல்ல, யுத்தம் ஏற்பட்டதற்கான அடிப்படையான காரணங்களை கண்டு பிடித்து, அவற்றை நீக்கிய பின் ஜனநாயக வழியில் அரசியல் இடம்பெறவேண்டுமென்பதே எமது நோக்கம் என்று

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவிக்கு மறுப்பு அதனால்'தொண்டா நடுநிலை

(கொழும்பு)

பொதுசனஐக்கியமுன்னணி தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்கமறுத்ததை அடுத்தே, தொண்டமான் ஜனாதிபதி தேர்தலில் நடுநிலைவகிக்க இருக்கிறார் என்று 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது

பொதுசன ஐக்கியமுன்னணியிடம் அமைச்சர் பதவிதமக்கு தரவேண்டுமென்ற கோரிக்கையை தொண்டமான் முன் வைத்தும் பொதுசன ஐக்கிய முன்னணி மறுப்புத் தெரிவித்தது என்று 'வெரித்தாஸ்' மேலும் தெரிவித்தது. ம-ரி

## சமாதான முயற்சிகளுக்கு பலதரப்பினரும் வரவேற்பு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக ஒரேவழி சமாதான முயற்சியாகும் என்று மதத்தலைவர்கள்- அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் பலர் கருத்து வெளியிட்டுள்ளதாக ரூபவாஹினி தெரிவித்தது.

வித்தியாலங்கார பிரிவேனாவின் தலைவரான ஒருவர் கருத்து வெளியிடுகையில் அரசின் தற்போதைய சமாதான முயற்சி வெற்றிபெற

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

04 — 11 — 1994ல்
வியாழன் மாற்றம்

சண்- மாஸ்ரர் எழுதிய ராசிபலன்கள். ஓராண்டுக்கான உங்கள் பலன்களை முன்கூட்டியே அறியலாம். எங்கும் கிடைக்கின்றது, சோபிதா, கே. கே. எஸ். வீதி, யாழ். நகர்.
சி-1280

வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிளிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1254)


# கல்விக்கு செலவிடும் பணம் வருமானத்தை அதிகரிக்கும்

— கலாநிதி சபா ஜெயராசா

(உடுவில்)

''ஒரு நாடு கல்விக்குப் பணத்தைச் செலவிடும்போது தேசிய வருமானம் அதிகரிக்கின்றது. ஏனைய துறைகளிலும் பார்க்க, கல்விக்கு இடும் மூலதனத்தைக்கொண்டு அதிக இலாபத்தை ஈட்டமுடியும் என்ற உண்மையை ஜப்பானுக்கு அடுத்ததாகக் கண்டறிந்தவர்கள் யாழ்ப்பாண மக்கள்.''

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும், பிரதேசசபையும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் 'கல்வியும் மனித வள அபிவிருத்தியும்'' பற்றிக் கருத்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்.

கன்னகம் பொதுசன கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கலாநிதி சபா ஜெயராசா கூறியதாவது

20 முதல் 25 ஆயிரம் ரூபா வரை செலவழித்து தனது மகனை படிக்கவைத்து பட்டம் பெற செய்த யாழ்ப்பாணத்து தந்தையொருவர் மகனுக்கு மாதாந்த வருமானத்தைப் பெற கல்வியை மூலதனமாக்குகின்றார்.

மனிதவள விருத்தி என்பது பாலர் கல்வியில் தொடங்குகிறது. இதில் நாம் பெருமளவு பின் தங்கியுள்ளோம். ஜப்பானின் உதவியுடன் சிங்களப்பிரதேசங்களில் வளர்ந்துள்ள பாலர் கல்வி போல் தமிழ்ப்பிரதேசங்களில் வளர்ச்சியடையவில்லை பாலர் கல்வியில் நாம் போதிய அக்கறை எடுக்காமையால் தான் எமது மாணவர்கள் இன்று கல்வியில் பெரும் பின்னடைவை எய்தியுள்ளனர்.

பாலர் கல்வியைத் தொடர்ந்து ஆரம்பக் கல்வி நிலை, ஆரம்பக் கல்விநிலையில் மொழி வளர்ச்சியும் கணித வளர்ச்சியும் அவசியமாகின்றது. ஜப்பானியர்களின் வேகமான வளர்ச்சிக்கு அவர்கள் தமது மொழியிலும் கணிதத்திலும் காட்டிய அக்கறையே காரணமாயிற்று என்றார். (109-இ)

விக்டர் ஐவன்
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையை ஒட்டியே இவர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன. -க-ரி

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

கல்லூரிகளில்

## தொழில்நுட்பக் கற்கை நெறிகள் கற்பிக்கப்பட வேண்டும்

[யாழ்ப்பாணம்[

எமது நாடு தொழில் வளத்தில் முன்னேற்றம் காண வேண்டுமாயின் இங்குதொழில் நுட்பத்தை வளர்த்தெடுக்க வேண்டும். தொழில் நுட்பக் கற்கை நெறிகளை எமது கல்லூரிகளில் கற்பிக்கவேண்டும், ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளில் தொழில்நுட்பத் தொழில்பாடுகள்,இன்று முன்னணியில் நிற்கிறது. இந்த நாடுகள் தொழில் நுட்பத் தொழிற்பாடுகளால் முன்னேற்றம் கண்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு யாழ். பல்கலைக்கழக குடிசார் பொறியியற்துறைப் பேராசிரியர் வே. நவரத்தினராசா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை கல்லூரி அதிபர் நாக. சண்முகநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் நவரத்தினராசா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

கல்லூரிகளில் படித்துவிட்டு வெளியேறும் மாணவர்கள் அரசாங்கத்தில் தொழில் பார்க்க வேண்டும் என்ற நிலை மாறவேண்டும். எமது நாட்டில் தொழில் நுட்பங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதற்காக தொழில் நுட்ப வல்லுனர்கள் இதில் தீவிரமாக ஈடுபட்டு எமது நாட்டின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பது மட்டுமல்லாது எமது மக்களுக்கு தொழில் வாய்ப்பினையும் இதன் மூலம் வழங்க வேண்டும்.

சர்வகலாசாலையிலிருந்து வெளியேறுபவர்கள் அரச சேவையை நாடுகின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். இவர்கள் வெளியிலிருந்து தொழில் நுட்பங்களை ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

இந்தப் பரிசளிப்பு விழாவில் மாணவர்களுக்கு திருமதி சரஸ்வதி நவரத்தினராசா பரிசில்களை வழங்கினார். (162)

16 பத்திரிகையாளர்கள்
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
எம். பி. எச். சிறிசேன (லேக்கவுஸ்), பிரபாத் சகபந்து,(உபாலிகுறூப்) துஷார குணரட்ன (விஜய குறூப்) ஆர். செல்வராசா (வீரகேசரி) அசோக டீ சில்வா (இலங்கை வானொலி) உடுவர ரண சிங்க (இலங்கை ரூபவாஹினி), சிப்ஸ் அனில் டீ சில்வா (இலங்கை ரூபவாஹினி), ஜே. டபிள்யூ. கே. அதிகாரி (அரசாங்க படப்பிடிப்பாளர்), செல்வி பி. தேவநாயகம் (சண்டே லீடர்), கிருஷ்ண விஜே பண்டார (லக்விம), அநுருத்து லொக்கு அப்புகாராச்சி (ராய்டர்), வருண கருணதிலக (ஏ. பி. அசோசியஸ் பிறேஸ்), டெக்ஸ்ரர் குறூஸ் (அரச அச்சகக்கூட்டுத் தாபனம்), தாரக்க லொக்கு லியான (லங்கா புவத்), இமாஸ்லி பேனுட் (சவுத்தேசியா தெற்காசிய நிருபர்), செல்வி பி. நாகேந்திரம் (இந்தியன் எக்ஸ்பிரஸ்) ஆகிய பத்திரிகையாளர் குழுவினரே நேற்று யாழ். வந்தவர்களாவர். 160-ரி


## அறிவித்தல்

வடஇலங்கைச் சங்கீத சபைத்

### தேர்வுகள் — 1995

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பங்களும் அறிவுறுத்தல்களும்
1994 - 11 - 01 செவ்வாய்க்கிழமை தொடக்கம்
1995 - 01 - 16 திங்கட்கிழமை வரை
சபைப் பணிமனையில், காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

படிவம் ஒன்றின் விலை ரூபா 10/-

★ 1995-ம் ஆண்டுத் தேர்வுக்காக, சபையால் அச்சிட்டு வழங்கிய படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். புகைப்படப் பிரதிகளிலும், தட்டச்சிலும் தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். 1995 - 01 - 16க்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

★ 1995-ம் ஆண்டுக்கான தேர்வுக் கட்டணங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது :

| | | | |
|---|---|---|---|
| தரம் : | 01 | — | ரூபா 50/- |
| தரம் : | 02 | — | ரூபா 75/- |
| தரம் : | 03 | — | ரூபா 100/- |
| தரம் : | 04 | — | ரூபா 125/- |
| தரம் : | 05 | — | ரூபா 200/- |
| தரம் : | 06 | — | ரூபா 250/- |

★ மேலும் விபரங்கள் தேவைப்படின், சபைப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

தி. பெரியதம்பி.
கல்விப் பணிப்பாளரும் [ யாழ். வலயம் : 01 ]
வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

(ஏ-4453)



பருத்தித்துறை பிரதேச சபை
புலோலி நூலகர் திருச்செல்வத்திற்கு

## சபாஸ்!!!



### திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம்

அன்புக்கினிய நண்பனே !

நீ பல்துறைகளிலும் பாராட்டுக்குரியவன். நீ பாராட்டப்படும்போது நாங்கள் மகிழவேண்டியவர்களல்லவா ? அன்று நூலகத்திலே நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் விழாவிலே ''நடமாடும் நூலகம்'', 'சோக்கிரட்டீஸ்'' என்று மட்டுமா ? பெண் அதிபரிலும் பெண்ணினத்தின் சார்பிலும் அல்லவா பாராட்டுக்களைப் பெற்றாய். இப்போ உள்ளூராட்சித் திணைக்களத்தால் பாராட்டுக்குரிய சிறந்த நூலகராகத் தெரிவாகி விடுதலைப்புலிகள் தமிழீழ அரசியல் பொறுப்பாளரிடமிருந்து பரிசில், சான்றிதழ் பெற்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்டாய். எமக்குக் கிடைத்த உனது நட்பைப் பெரும் பேறாக அல்லவா கருதுகிறோம். நிச்சயம் நீ பாராட்டப்படவேண்டியவன்தான்!

உன் பணி தொடரட்டும் ! !
துணிந்து செல் நண்பா ! ! !

உன் பாசமிகு நண்பர்கள்.

புலோலி. (ஏ-4451)



## திருவே நீ நீடூழி வாழ்க!

பாராட்ட வேண்டும் — இந்த
பாராட்டுக் குரியவரை
பாராட்ட வேண்டு மன்றோ !
பலமேலான நல்லகுண முள்ளவராம் — புலோலி
பொதுநூலகர் திருச்செல்வம் அவர்கள்
பத்திரிகை எழுத்தாளராய்
பல்கலையும் கற்றவராய்
எதற்கும் கருத்துரைக்க வல்லவராம்
ஏ. என். எஸ். திருச்செல்வம் அவர்கள்
பாராட்ட வேண்டும் — இந்த
பாராட்டுக் குரியவரை
பாராட்ட வேண்டு மன்றோ
பசுமையுள்ள சிற்றூராம் — வராத்துப்பளை
வாழ்வாங்கு வாழ்வோர் வாழுமூராம்
செல்வந்தர் நாகமணி வழிவந்த — திருச்செல்வம்
திக்கெட்டும் தெரிந்தவராம் — இன்று !
வல்லிபுர ஆழ்வார் பெருமான் திருவருளால்
திருச்செல்வம் பல்லாண்டு வாழியவே ! ! !

இசையமைப்பாளர்
க. தாமோதரமும், க. செல்வராஜாவும்
புலோலி வடக்கு,
பருத்தித்துறை, (ஏ-4452)

மணிவாக்கு

பேராசையினுல் மனிதன் நண்பர்களை விடுகிருன். பற்றுதலால் சுவர்க்கத்தை அடைவதில்லை பிறரிடத்தில் யாசித்தல் விஷமாகும்.

- யக்ஷபிரசன்னம்

# யாழ். நகருக்கு இலங்கை கொடியை எடுத்துச் செல்லத் தேவையில்லை

## லயனல் கூறுகிருர்

[கொழும்பு[

யாழ்ப்பாணத்தில் கடந்த 13-ம், 14-ம் திகதிகளில் நடந்த சமாதானப் பேச்சுக்களின் போது, பேச்சுவார்த்தை மேசையில் இலங்கைத் தேசியக்கொடியை வைக்க அனுமதிக்கப்படவில்லை என ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்த குற்றச்சாட்டில் எதுவித ஆதாரமும் இல்லை எனவும் இது தவருனது எனவும் திரு. லயனல் பெர்ஞண்டோ தெரிவித்துள்ளார்.

அரச சார்பில் முதற்சுற்றுப் பேச்சுக்களில் கலந்துகொண்ட திரு.லயனல் பெர்ஞண்டோ மேலும் கூறுகையில்: இலங்கையின் தேசியக்கொடியான சிங்கக்கொடியை அரச தூதுக்குழு யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லவில்லை. அதற்கு அவசியமும் கிடையாது. யாழ்ப்பாணம் இலங்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது எனபதுதான் இதற்குக் காரணம்.

நாட்டிற்கு வெளியே பேச்சுவார்த்தைகளை நடாத்திஞல் தான் தூதுக்குழு நாட்டின் தேசியக்கொடியை எடுத்துக் செல்வது அவசியம்.

பூநகரி — சங்குப்பிட்டிப் பாதை ஆனையிறவுக்கு சமீபமாகவுள்ளது எனவும் இந்த வேட்பாளர் தெரிவித்த கருத்து பொதுமக்களை தவருக வழிநடத்துவதாகும். இந்தப் பாதை ஆனையிறவுக்கு மேற்குப் பகுதியில் பல மைல் தூரத்தில் இருக்கிறது. ஆனையிறவு இராணுவ முகாமுக்கு சமீபமாக இந்தப்பாதை இருக்கவில்லை.

இதுபோன்ற அறிக்கைகள் தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும். பொதுமக்களைதவருகநடத்திச் செல்லும் முயற்சியில் இச்சக்திகள் ஈடுபட்டுள்ளமை இப்போதுதெளிவாகத் தெரிகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையும் பேச்சுவார்த்தை மேசையில் புலிக்கொடி பறந்தது குறித்து சர்ச்சையை ஏற்படுத்தியதும் இதன்மூலம் இச்சமாதான முயற்சிகளை திசை திருப்ப முயல்வதும் குறிப்பிடத் தக்கது, (சி)

# நமது நோக்கு

## நெஞ்சு குறு குறுப்பதேன்?

வோல்ட் ஹீம் - ஜேர்மன் மொழி பேசும் ஆஸ்திரிய நாட்டவர். ஐ. நா. செயலாளராகக் கடமையாற்றிய பின் ஆஸ்திரிய நாட்டு ஜனுதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்

இரண்டாவது உலகப் போர் நடந்தபோது, ஆஸ்திரியா ஜேர்மனியின் ஒரு பகுதியாக விளங்கியது. இவர் ஓர் படை அதிகாரியாகக் கடமை புரிந்தார்.

1939-45ல்நடைபெற்ற இந்தப்போரில் இவர் யுத்தக் கைதிகளைக் கொடுமைப்படுத்திஞர் என்ற குற்றச்சாட்டு 1988ல் எழுந்தது. அது பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

''நான் எனது இராணுவக் கடமைகளையே புரிந்தேன்!'' என்பது அவரது வாதம்,

ஆனல்-1994 ஜூனில் வெளிவந்த அந்தக்குழுவின் அறிக்கையில்காணப்பட்ட செய்தி சிறீலங்காவின் இன்றைய காலப் பகுதிக்கு மிகவும் பொருத்தமானது.

அறிக்கை தரும் செய்தி என்ன? ''கடமைக்கப் பாற் செய்யப்பட்ட கொடுமைகளோடு சம்பந்தப்பட்டார்!'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் வடக்கிலும் தெற்கிலும் நடாத்தப்பட்ட சில கொடூரங்கள் விசாரிக்கப் படும்போது சிலர்கொதிப்படைவதாகத் தெரிகிறது.

நேரிடையாகத் தமது கொதிப்பை வெளியிட முடியாத சிலர் ஒரு பகுதி மக்கள் மீது அழுத்தங்களைத் தொடருவதும்தமக்கெனத் தனியான கொள்கைகளை வெளியிடுவதும் தெரிகிறது.

அது மாத்திரமல்ல சில அரசியல்வாதிகள் கூட அவர்களுக்காகப் பரிந்து பேசுவதும் நியாயம் கற்பிப்பதும் சில அரசியல் உள்நோக்கங்களை வெளிப்படுத்துவதாகவே கணிக்கப்படவேண்டும்!

உலகிலே மூடிமறைக்கப்பட்ட அநீதிகள் பற்றி ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னும் ஆராய்ந்துஅறிக்கைக்கள் வெளிவரும் பின்னணியில் இங்கு நீதி விசாரணைகள் முடக்க முயற்சி நடக்கிறது.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறதா?

## புலதும் பத்தும்

### ஒரு கணிப் -¡

மகர ராசிக்காரருக்கு நவம்பர் 16 வரை பத்தாமிடத்தில் அதாவது தொழில் ஸ்தானத்தில் சூரியன் நிற்பது அரச கருமங்களுக்கு நல்ல பலனும்!

அத்தோடு புதன், சுக்கிரன், ராகு ஆகியோரும் சூரியனேடு சேர்ந்து நிற்கின்றனவாம். பத்தில் ராகு நிற்கும் போது கர்மசித்தி, புதன் நிற்கும்போது பிரசித்த புகழ் என்றெல்லாம் போசார பலன் உண்டு.

வியாழ மாற்றமும் மகர ராசிக்காரருக்கு நன்மை தரும் என்கிருர்கள் சோதிடர்கள்.

முக்கிய குறிப்பு: சந்திரிகா மகர ராசியிற் பிறந்தவர் என்று சொல்லிக் கொள்கிருர்கள்.

—மயூரன்

# 600 தமிழ், சிங்கள இளைஞர் விரைவில் விடுவிக்கப்படுவர்?

[கொழும்பு[

அவசரகாலச்சட்டம் பயங்கரவாதச் சட்டம் ஆகியவற்றுக்கமைய தடுத்து வைக்கப் பட்டுள்ள சுமார் 600 தமிழ், சிங்கள இளைஞர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள்.

சிறு குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 200 இளைஞர்களை விடுதலை செய்யுமாறு அவசரகாலசட்டவிதிகள் சம்பந்தமான குழுவிற்கு தமது திணைக்களற பணிப்புரை வழங்கியிருப்பதாக பதில் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் 400 இளைஞர்களை விடுதலை செய்வதுபற்றி தமது திணைக்களம் பரிசீலனை செய்து வருவதாகவும் அவர் கூறிஞர். தடுத்து வைக்கப்பட்டுள்ள 200 இளைஞர்களில் 74 பேருக்கு எதிராக மேல்நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வழக்குகள் வாபஸ் பெறப்படவேண்டு மெனவும் அவர் கூறிஞர். (சி)

# வை.கோவும் ஆதரவாளரும் ஷேசன் வீட்டின் முன் கைது

(புதுடில்லி)

இந்திய தேர்தல் ஆணையாயாளர் திரு. சி.என். ஷேசன் வீட்டின் முன்ஞல் மறியல் செய்ய முயன்ற மறுமலர்ச்சி தி. மு. க. தலைவர் திரு. வை. கோபாலசாமியும் அவரது தொண்டர்களும் புதுடில்லிப் பொலிசாரிஞல் கைது செய்யப்பட்டனர்.

சேஷனின் வாழ்க்கை வரலாற்று புத்தகத்தில் 1965 ம் ஆண்டில் அமெரிக்காவின் சி. ஐ. ஏயின் தூண்டுதலின்பேரில் திரு. சி,என், அண்ணுத்துரை ஹிந்தி எதிர்ப்பும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாக வெளிவந்த குறிப்பு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது,

இதன் ஒரு கட்டமாகவே திரு. வை. கோபாலசாமியும் அவரது ஆதரவாளர்களும் சேஷன் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் மறியல் செய்ய முற்பட்டபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர். (சி)

# இராசி பலன்

24 - 10 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி- 07)

பஞ்சமி பி. இ. 3-41 வரை, மிருகசீரிடம் பி. இ. 2-38 வரை, அமிர்தசித்தயோகம், இராகுகாலம் காலை 7-32 முதல் 9-02 வரை, சுபநேரம் நண்பகல் 12-02 முதல் 1-33 வரை.

மேடம்: குடும்ப உறவு, பெரியோர் ஆசி, பாராட்டு.

இடபம்: மயக்க நிலை , மன வேதனை, அலைச்சல்.

மிதுனம்: புதிய முயற்சி, பெற்ரேர் ஆசி, பயணம்,

கடகம்; உடல் அசதி, வாழ்வில் சோதனை, கடன்படல்.

சிங்கம்: விரோதிகளை வெல்லுதல், பணவரவு, அந்நியர் உறவு.

கன்னி: நினைத்ததைச் சாதித்தல், கல்விஞானம், மனைச் சிறப்பு.

துலாம்: களைப்படைதல், குடும்பப்பிரிவு, பழைய நினைவு.

விருச்சிகம்: அயலவர் சச்சரவு, பொருள் நஷ்டம், யோசனை.

தனுசு: விருந்தோம்பல், இனசன உறவு, காரிய சித்தி.

மகரம்: நல்லோர் ஆதரவு, சயன சுகம், கற்பனை.

கும்பம்: வாக்குவாதம், துணிச்சல் குறைவு, அவப்பெயர்.

மீனம்: மனஸ்தாபம், நிர்ப்பந்தம், அஜீரணம்.

—ஜோஸ்யர்

## வீதியின் சீர்கேடு

(அரியாலை)

சுன்ஞகத்துக்குச் செல்லும் பிரதானவீதியும் சந்தையுடன் உள்ள வீதிகள் யாவும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இதஞல் வாகனப் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறு ஏற்பட்டுள்ளது. யாழ்.மாநகரசபைக்கு அடுத்ததாக வரி வசூலிக்கும் சபை சுன்ஞகம் பட்டினசபை என்பது குறிப்பிடத்தக்கது. -59

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 - 10 – 24

திங்கள் இரவு

08-01 தளிர்கள்- சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 தாயகப் பாடல்கள்
08-30 செய்திகள்
08-40 தரிசனம்- பாலர் கல்விக்கழக தலைவர் திரு. ஆறுமுகம் செல்லையா அவர்களுடனுன செவ்வி.

1994 – 10 – 25

செவ்வாய் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகை செய்திகள்.
07-40 தாயகப் பாடல்கள்.

# 'பிஞ்சுமனம்' திரைப்படம் விரைவில் வருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய 'பிஞ்சுமனம்' என்னும் முழுநீளப்படம் வெகுவிரைவில் வெளிவருகின்றது.

1986 ,87காலப் பகுதிகளில் 'மரணம் வாழ்வின் முடிவல்ல, தாயகமே தாகம்' ஆகிய முழுநீளப் படங்களின் இயக்குனர் திரு. கேசவராஜனின் கதை' திரைக்கதை, வசனம், நெறியாழ்கையில் இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டுக் கழகத்தின் திரைப்படப் பிரிவிஞல் தயாரிக்கப்பட்ட இப்படத்தில் யாழ். மாவட்ட கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். இப்படத்தின் இசையமைப்பினை ராஜன் இசைக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ் ஆஸ்பத்திரியில்

# கடந்த 9 மாதங்களில் 1023 பேர் மரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனு வைத்திய சாலையில் கடந்த ஒன்பது மாதங்களில் 1,023பேர் மரணமடைந்துள்ளனர்.

பல்வேறு வகை நோய்கள் மற்றும் அரச படையினரின் தாக்குதல்களால் இந்த மரணங்கள் ஏற்பட்டுள்ள.ன

கடந்த 9மாதங்களில் அதிகபட்சமாக ஏப்ரல் மாதத்தில் 178 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமடைந்துள்ளனர். ஜனவரியில் 122 பேரும், பெப்ரவரியில் 116 பேரும், மார்ச்சில் 94 பேரும், மே இல் 118 பேரும், ஜூனில் 94 பேரும், ஜூலையில் 103 பேரும் ஆகஸ்ட்டில் 110பேரும், செப்ரெம்பரில் 93 பேரும் மரணமடைந்துள்ளனர்,

கடந்த 9 மாதங்களிலும் யாழ். ஆஸ்பத்திரியில் 2,19,085 பேர் வெளிநோயாளர் பிரிவிலும்,48,711 பேர் மருத்துவ விடுதிகளிலும் தங்கி சிகிச்சை பெற்றுள்ளதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [சி]

# இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தின் 'வணிக வியலாளன்'' சஞ்சிகை வெளியீட்டு விழா மன்றத்ததலைவர் செல்வன் ச. குவேந்தன் தலைமையில் எம். சீ. மண்டபத்தில் இன்று 24ம் திகதி நடைபெறுகின்றது. இவ்விழாவிலே யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ப. சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிருர். -52

வனத்தின் செழிப்பு
வறுமையின் அழிப்பு

# "இரக்கமற்ற போர் தொடர இனிமேலும் அனுமதிக்கக்கூடாது"

— பிரதமர் சந்திரிகா உரை

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் தொடரும் இரக்கமற்ற யுத்தத்தை இனிமேலும் அனுமதிக்கக் கூடாது. யாழ்ப்பாண மக்களின் துன்ப துயரங்களில் தென்பகுதி மக்களும் பங்கு கொள்ளவேண்டும். என பிரதமர் சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அம்பாறையில அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்ற முழுநம்பிக்கை எமக்குண்டு என்றார்.

முன்னைய ஐ. தே. க, அரசிலிருந்த 93 அமைச்சுக்களுக்கும் தனித்தனி ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் என்றும் ஜே. வி. பி. காலத்தில் கொல்லப்பட்டோர் தொடர்பாக நேர்மையான விசாரணை நடாத்தப்பட்டு அவர்கள் நீதியின்முன் நிறுத்தப்படுவர் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். -க-ரி

# புதிய அரசியலமைப்பின் கீழ் 95 நவம்பரில் பொதுத்தேர்தல்

(கொழும்பு)

அரசியலமைப்பு சட்டம் மாற்றப்பட்டு புதிய அரசியலமைப்பு சட்டத்தின்கீழ் அடுத்த வருடம் நவம்பர் மாதத்தில் நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெறுமென அரசு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அரசியலமைப்பை திருத்தியமைக்க நிமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு தற்போது திருத்தவேண்டிய விடயங்கள் குறித்து சிபார்சுகளை பெற்று வருகிறது. இவை நிறைவு பெற்றதும் அரசியலமைப்பு சட்டம் மாற்றப்படுவதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பு ஆடுத்த வருடம் ஜூலை மாதத்தில் நடைபெறும்.

பெரும்பாலும் இதுவெற்றியளிக்குமென எதிர்பார்க்கப்படுவதால் புதிய அரசியலமைப்பு சட்டத்தின்கீழ் நாட்டில் மீண்டுமொரு பொதுத் தேர்தல் நவம்பரில் நடைபெறுமெனவும் கூறப்படுகிறது. -சி ரி

## பணயம் வைக்கப்பட்ட யாழ். வர்த்தகர் மீட்பு

### முன்னாள் இராணுவ கப்டன் கைது

(கொழும்பு)

கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்ட பம்பலப்பிட்டி தமிழ் வர்த்தகர் சி. ஐ, டி. பொலிஸாரின் நடவடிக்கையால் மீட்கப்பட்டார். இவரை கடத்திச் சென்று பணயம் வைத்த கோஷ்டியின் தலைவரான முன்னாள் இராணுவ கப்டன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டி வர்த்தக நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஐ. சிவப்பிரகாசம் என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்டார்.

50 லட்சம் ரூபா தந்தால் மட்டுமே இவர் உயிருடன் விடுவிக்கப்படுவார் என இவரை கடத்தியர்கள் மனைவிக்கு தொலைபேசி மூலம் அறிவித்திருத்தனர். இத்தகவலை அவரது மனைவி பொலிஸாருக்கு தெரிவித்தார்.

இதையடுத்து சி. ஐ. டி பொலிஸாரார் மேற்கொண்ட துணிகர நடவடிக்கையினால் வர்த்தகர் உயிராபத்தின்றி மீட்கப்பட்டதுடன் கடத்தல் கும்பலின் தலைவரும் சி. ஐ. டி. பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டார். (சி-ரி)

## பொறியியலாளர் குழு யாழ். வருகிறது

[கொழும்பு]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விரைவில் பொறியியலாளர் குழுவொன்று செல்லவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு விபரங்களை சேகரிப்பதற்காகவே இந்த பொறியியலாளர்கள் குழு விரைவில் யாழ்ப்பாணம் செல்லவிள்ளதாம்.

வடபகுதியில் அடுத்த ஒரு வருடகாலத்தில் பல அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றும் நோக்கிலேயே அரசு முதற்கட்டதாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. -சி-ரி

∴ வடபகுதியில்

## வாக்களிப்பு நிலையம்; பொலிஸார் முடிவுசெய்வர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக வடபகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது பற்றி முடிவு செய்யும் பொறுப்பு பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் இத்தேர்தல் நடைபெறவுள்ளதால் முன்பு பொதுத்தோதல் நடைபெற்றது போன்றே இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது-

இதனால் வடக்கில் எந்தெந்தப் பகுதியில் வாக்களிப்புநிலையங்கள் அமைப்பதென்பது பொலிஸாரிடமே விடப்பட்டுள்ளதால் இதற்கான இறுதித் தீர்மானத்தை பொலிஸ் மா அதிபரே மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ரி-சி

# விமானப் படைக்கு புதிய ஹெலிகள்

(கொழும்பு)

இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்டர் பிரிவு பாரிய அளவில் விஸ்தரிக்கப்படவுள்ளதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக ரஷ்ய தயாரிப்பான 'எம். ஐ.-17'ரக நவீன ஹெலிகொப்டர்கள் பல கோடி ரூபாவுக்குகொள்வனவு செய்யப்பட்டு விமானப்படையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளன.

ரஷ்யாவிலிருந்து இவ்வருட முற்பகுதியில் விமானப் படையினருக்கென எட்டு 'எம். ஐ. 17' ரக ஹெலிகொப்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டதும் தற்போதும் அதே ரக ஹெலிகொப்டர்கள் பெருமளவில் கொள்வனவு செய்யப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -சி-ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

**Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B.**

## சங்குப்பிட்டி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இதேவேளை இப்பாதை பொதுமக்களின் போக்குவரத்திற்காக திறக்கப்படும்போது இப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை அங்கிருந்து அகற்றுவது குறித்து பிரதமர் சந்திரிகாவும், பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்தையும்படைத் தளபதிகளுடன் பாகாப்பு அமைச்சு அதிகாரிகளுடனும் கடந்த சிலதினங்ளுக்கு முன் பேச்சுக்களைநடாத்தியுள்ளனர் சி-ரி

## யு. என். எச். சி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு பிரதி அமைச்சருடனும் முக்கிய பேச்சுக்களை நடாத்தியுள்ளனர். மேலும் இன்று விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்த யாழ். வரும் குழுவினக்கு இதுபற்றி விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை அரச பிரதிநிதிகள் குழுவிற்கு பாதுகாப்பு பிரச்சினை குறித்து விளக்மளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, சி-ரி

# சமாதான முயற்சிக்கு வெளிநாடுகள் பாராட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை வெளிநாடுகள் பல பாராட்டியுள்ளதாக லங்காபுவத் தெரிவித்துள்ளது.

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையிலான அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளை இந்த நாடுகள் பாராட்டியுள்ளன.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கவும் அவை உறுதியளித்துள்ளன.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜேர்மனி, நோர்வே, யப்பான், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, டென்மார்க் போன்ற பல நாடுகள் இந்தப் பாராட்டைத் தெரிவித்துள்ளன. -ரி

# கொழும்பில் சமாதானம் வேண்டி பாத யாத்திரை

(கொழும்பு)

சமாதானம் வேண்டி நேற்று கொழும்பில் சமாதான பாத யாத்திரையொன்று நடைபெற்றது.

இந்த சமாதான யாத்திரையில் பல தரப்பட்ட சமயங்களையும் சமூகங்களையும், ஸ்தாபனங்களையும் சேர்ந்த மக்கள் பங்குபற்றினார்கள்.

யூனியன் பிளேஸிலிருந்து விகாரமகாதேவி பூங்காவரை இப்பாதயாத்ரை இடம் பெற்றது.

சமாதானத்தை கோரும் மக்களின் முதல் நடவடிக்கையாக இந்தப் பாதயாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று இப்பாதயாத்திரையில் பங்குபற்றியவர்கள் தெரிவித்தனர்.

யாத்திரையின் இறுதியில் சமாதான மாநாடு ஒன்றும் நடைபெற்றது. -ரி

# முதற் கட்டப் பேச்சினால் திருப்புமுனை ஏற்பட்டது

(நெல்லியடி)

அரசு தரப்புக் குழுவினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு புதிய திருப்புமுனை தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். நகருக்கு விஜயம் செய்த பத்திரிகையாளர் குழுவினரில் ஒருவரான சண்டே லீடர் நிருபர் செல்வி பி, தேவநாயகம், பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்று வந்த சமயம் எமது நெல்லியடி செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். '160

## சாதனை வீரர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

பிரபல சாதனை வீரர் சாண்டோ எம். துரைரத்தினம் நேற்றுக்காலை 6 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் காலமானார்,

பருத்தித்துறையைச்சேர்ந்த இவர் (வயது 53) சில தினங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். -க-ரி

## சமாதான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வேண்டும் என்று கூறினார்.

கொழும்பு மேற்றிராணியார் வணக்கத்துக்குரிய கென்னத் பெர்ணண்டோ கருத்து வெளியிடுகையில், சிங்கள தமிழ் மக்களுக்கிடையில் நட்புறவு ஏற்படவேண்டும் என்றும் இதனை ராணுவ ரீதியில் ஏற்படுத்த முடியாது என்றும் கருத்து வெளியிட்டார்.

இந்த முயற்சியை நாம் கைவிடக் கூடாது, படிப்படியாக மிகுந்த கவனத்துடன் சமாதான நடவடிக்கைகளை நாம் மேற்கொணடால் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐ. தே. க. பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜயசேகரா கருத்து வெளியிடுகையில்: சமாதானப்பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபொழுதே ஐ. தே. க. மகிழ்ச்சியை தெரிவித்தது என்று கூறினார்.

'லங்கா தீப ஆசிரியர் சிறிரணதுங்கா கருத்து வெளியிடுகையில்; இந்தப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாணவென கடந்த 17 வருட காலமாக மேற்கொள்ளப்பட்டமுயற்சிகள் தோல்வி கண்டுள்ளன. எனவே அரசியல் தீர்வே இந்தப் பிரச்சினை தீர்வுக்கான ஒரேவழி என்று அவர் தெரிவித்தார். -ரி

## இனவாதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று கொழும்பில் நடைபெற்ற சமாதான ஊர்வலத்தை ஒழுங்கு செய்தவர்களில் ஒருவரான அஜித் ரூபசிங்க பி. பி, சி சந்தேசியாவுக்குதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்யுத்தஉணர்வுகள், இனவாதங்கள் இன்னும் எம்மிடையே நீங்கவில்லை. இதை ஒழிப்பதற்குநடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்" என்றார். -ம-ரி

## போர் நிறுத்தம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பற்றி பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த பல இராணுவ அதிகாரிகளுடன் ஆராய்ந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச்சந்திப்பில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்திவரும் அரசு பிரதிநிதிகளும் கலந்து கொண்டதுடன் இதில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தப்பாடு எனக்கருதப்பட்ட போர் நிறுத்த திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும்தெரியவருகிறது. -ரி

## அரசு—புலிகள்

(1-ம் பககத்தொடர்ச்சி)

துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இன்று நடைபெறும் பேச்சுவார்த்தைகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் முற்பகலும் பிற்பகலும் இரண்டு கட்டங்களாக இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

இப்பேச்சுக்களின் போது யுத்தநிறுத்தம் பாதை திறப்பு ஆகிய விடயங்கள் உட்பட முதலாம் கட்ட பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற விடயங்கள் அனைத்தும் விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. -ரி